296



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 FEB 1959
MADRAS
296/1-60

# திருக்காரிகரை என்கிற ராமகிரி
# தேவஸ்தான ஸ்தல புராண வசனம்

*

புத்தூர்—மதராஸ் (வழியாக)
நாகலாபுரம் பஸ் ரூட்,
ராமகிரி.

*

எல்லா உரிமைகளும் தேவஸ்தான
தருமகர்த்தரைச் சேர்ந்தது

1960 விலை 0-4-0

N60
3260

Q23:38.2112TK N60 296-1-60

# முகவுரை

செங்கற்பட்டு ஜில்லா, திருவள்ளூர் தாலுக்கா, நாகலாபுரம் சமீபத்தில், அரண்ய நதீதீரபுரமாகிய பாகவத, பிரசித்தமாயும், திருக்காரிகரை யென்னும் பெயருடன், நால்வர் பாடல் பெற்ற ஸ்தலமாகிய **ஸ்ரீராமகிரி க்ஷேத்திரத்தில்** அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராய் விளங்கும் " ஸ்ரீமரகதாம்பா சமேத வாலீஸ்வர ஸ்வாமி :

ஸ்ரீராமர் பிரம்மஹத்திதோஷம் நிவர்த்திசெய்ய, ஸ்ரீ ஆஞ்சநேயரை மகாகாசியில் உள்ள சிவலிங்கத்தை எடுத்து வரச்சொன்னார்.

தொண்டர்களே ! ஸ்ரீ ஆஞ்சநேயர் காசியிலிருந்து கொணர்ந்து வந்த சிவலிங்கம் திருக்காரிகரையில் எப்படி பிரதிஷ்டையானதோ, திருக்காரிகரை கிராமத்திற்கு ராமகிரி என்று பெயர் எப்படி வந்ததோ, மகேஸ்வரருக்கு வாலீஸ்வரர் என்று பெயர் எக்காரணத்தினால் ஏற்பட்டதோ, இந்நூலில் எழுதப்பட்டு இருக்கிறது.

பக்தர்களான நீங்கள் இந்த ஸ்தல புராணத்தைப் படித்து, பரமசிவனின் கிருபைக்குப் பாத்திரர்களாவீர்களாக !

இந்த ஸ்தல புராணம் ஸ்ரீ வாலீஸ்வர ஸ்வாமி க்ஷேத்திர அர்ச்சகர் காலஞ்சென்ற சுப்ரமணிய குருக்கள் குமாரர் ஸ்ரீ சிவஸ்வாமி குருக்களிடமிருந்த தாமிர சிலா சாசனத்திலிருந்து எடுத்து அச்சிடப்பெற்றது.

இந்த ஸ்தலம் நாகலாபுரம் வழி புத்தூர்-மதராஸ் பஸ் ரூட்டில் இருக்கிறது.

**ஆர். எஸ். சிவசாமி குருக்கள்**
ராமகிரி
ரஜாநகரம் பேட்டை போஸ்ட்,
திருவள்ளூர் தாலூக்கா
செங்கற்பட்டு ஜில்லா.

8326

கணபதி துணை

83260

# திருக்காரிகரை என்கிற ராமகிரி தேவஸ்தான

# ஸ்தல புராணம்

திரேதாயுகத்தில், தசரத மகாராஜருடைய திருக்குமாரன் ஸ்ரீராமர் இலங்கைக்குச்சென்று, லங்கேஸ்வரனாகிய ராவணனைக் கொன்று அன்னானுடைய கட்டுப்பாட்டினால் சிறை கிடந்த தன் மனைவி கற்புடைய சீதாதேவியை உடனழைத்துக்கொண்டு ராமேஸ்வரத்தையடைந்தார்.

இராவணன் பிரம்மாம்சமாகிய காரணத்தினால், ஸ்ரீராமருக்கு அந்த பிரம்மஹத்திதோஷம் ஏற்பட்டது. அதன் நிவர்த்தியின் காரணமாக வசிஷ்டர் முதலான மகா ரிஷிகள், மகா காசியில் உள்ள சிவலிங்கங்களில் ஒன்றைக் கொணர்ந்து, ராமேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்து, மகேஸ்வரனைப் பூஜித்தால் பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தியாகுமென மொழிந்தனர்.

அத்திருக்காரியம் செய்வதற்கு ஸ்ரீராமர் இணங்கி, தன்னுடைய நம்பிக்கைத் தொண்டனாகிய ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு இதுபோன்று கட்டளையிட்டார்.

"ஆஞ்சநேயா! நாளை உதயத்திற்குள் காசிக்குச் சென்று, கங்கையில் ஸ்னானஞ்செய்து திரிகரணசுத்தி உடையவனாய், காசி க்ஷேத்திரத்தில் உள்ள சிவலிங்கங்களில் ஒரு லிங்கத்தை எடுத்துக்கொண்டு உச்சிப் பொழுதிற்கு இராமேஸ்வரம் வந்து சேரவேண்டும்."



அவ்வண்ணமே பவன குமாரன் முதல் நாளே, ராமேஸ்வரத்தை விட்டு, ஆகாய மார்க்கத்தில் திருக்காரிகரை கிராமத்தின் வழியாக காசிக்குச் சென்றார்.

திருக்காரிகரையின் தோற்றம்:—

திருக்காரிகரை முதல் ஸ்ரீ காளஹஸ்திவரையில், இப்பொழுது இருப்பதுபோல் முன்பு மலைப்பிரதேசம் கிடையாது. அதற்கு பதிலாக 'காளிங்கமடுவு' என்ற நீர்ப் பரப்பு இருந்தது. அந்த மடுவுக்கு இருகரைகளிலும் மக்கள் வாழ்க்கை ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்தனர். திருக்காரிகரை கிராமத்தில் ஸ்ரீ காளிகாதேவி சமேதராய் ஸ்ரீ காளபயிரவ ஸ்வாமி அவர்கள் எழுந்தருளி இருந்தார்.

அன்று ஸ்ரீ ஆஞ்சநேயர் காசிக்குச் செல்லும் காரியத்தை ஸ்ரீ காளபயிரவர் உணர்ந்து அவர் கொண்டு வரும் சிவலிங்கத்தை எப்படியாகிலும் தன் ஸ்தலத்தில் நிலை நிறுத்திக்கொள்ள முயற்சித்து, அதற்கேற்றதொரு யோசனை செய்தார்.

பின்பு, ஸ்ரீ காளபயிரவர் சூர்ய பகவானிடம் சென்று, "நாளை காலை முதல் உச்சிக்காலம்வரை தங்களுடைய முழு சொரூபம் அருளவேண்டும். இதற்குத் தாங்கள் சம்மதிக்க வேண்டும்" என்றார். அதற்கு சூரிய பகவான் சம்மதித்தார்.

பின்னும் ஸ்ரீ பயிரவர் கங்காதேவியிடம் சென்று, "பவானி! நாளை காலை முதல் உச்சிக்காலம் வரை, காசி முதல் திருக்காரிகரை வரையில் எவர் கண்ணுக்கும் தெரியக்கூடாது" என்றும், நான் நினைத்த மட்டில் தோற்றம் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்ட பின் கங்கையும் சம்மதித்தது.

கடைசியாக, ஸ்ரீ காளபயிரவர் வாயு தேவரிடம் சென்றார். வாயுதேவர் வந்தவரை உபசரித்து, தக்க

முறையில் வரவேற்று, வந்தகாரியம் யாதெனக் கேட்க, அதற்கு பயிரவர் அவர் தெரியப்படுத்தும் காரியம் நிறைவேற்றும்படி வாக்குத்தத்தம் செய்துகொண்ட பின் சொல்கிறார் :

"தேவனே! நாளை காலை முதல் உச்சிக்காலம் வரை திருக்காரிகரையிலிருந்து காசி வரையில், தெற்கு திசையிலிருந்து வடக்குதிசையை நோக்கி தங்கள் முழுப்பலத்தையும் காட்ட வேண்டும்" எனவே வாயு தேவரும் ஒப்புக்கொண்டார்.

பிறகு, ஸ்ரீ பைரவர், வாயு தேவரிடமிருந்து தன் இருப்பிடமாகிய திருக்காரிகரைக்கு வந்து அன்றிரவு அவ்வூரிலிருக்கும், மக்களனைவருடைய சொப்பனத்தில் தோன்றி "நாளை காலை முதல் உச்சிக்காலம் வரை எவரும் வீட்டைவிட்டு வெளியில் வரக்கூடாது" என்று கட்டளையிட்டார். இவ்விடமிவ்விதமிருக்க:—

காசிக்குச்சென்ற ஸ்ரீ ஆஞ்சநேயர் அன்றிரவு அவ்விடம் தங்கி நித்திரை செய்து, மறுநாள் சூரிய உதயத்திற்கு முன்பு எழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, தூய்மையான உள்ளத்தோடு ஸ்ரீ காசிநாதரை தரிசித்து, அவ்விடமிருக்கும் சிவலிங்கங்களில் ஒன்றை தன் வாலால் கட்டிப் பெயர்த்து, சிரசின் மீது வைத்துக்கொண்டு, ராமேச்சுரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

அவ்வளவில் கோடி கிரண சீற்றத்துடன் சூரிய பகவான் உதயமானார். படிப்படியாக கதிரவன் வாக்குக் கொடுத்தபடி தன் முழுப்பார்வையும் திறந்துவிட்டார். வாயு தேவரும், தன் முழுப்பலத்தையும் காட்டிக் கொண்டிருந்தார். கங்கையும் மறைந்துவிட்டது.

ஸ்ரீ ஆஞ்சநேயர், வெய்யிலின் வெப்பத்தாலும், காற்றின் கொடுமையினாலும், களைப்பு மேலிட, நாவரண்டு ஆகாய மார்க்கத்தில் தடுமாறி வந்துகொண்டிருந்தார்.



"ஆகா! நேற்றைய தினம் நான் சென்றபோது இந்தக் குட்டைகள் ஜலம் நிரம்பி இருந்தனவே! இன்று அவை எங்கு சென்றன? அதற்கேற்றபடி வெய்யிலும், காற்றும் அதிகமாய் விட்டதே! அன்று, ராவணன் குமாரன் இந்திரஜித்தானவன் தன் வஜ்ராயுதத்தை ஏவி லக்ஷ்மண ஸ்வாமியை மூர்ச்சை யடையுமாறு செய்தான். அப்பொழுது நான் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டுவந்து, மூர்ச்சைத் தெளிய வைத்தேனே; அப்பொழுது கூட எனக்கிவ்வளவு சிரமம் ஏற்படவில்லையே"! என்று சிந்தனை செய்தவாறே வந்து கொண்டிருந்தார்.

83260

இவ்விதமாகக் கஷ்டப்பட்டு வந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்காரிகரை சமீபித்தார்.

"இவ்விடமாவது, என் தாகமடங்க நீர் கிடைக்குமா?" என தேடிக்கொண்டிருந்தார்.

இதற்குள் ஸ்ரீ காளபயிரவ ஸ்வாமி அவர்கள் தன்னுடைய அஷ்டபுஜம், நாய் வாகனம் முதலியவை மறைத்து, மாடு மேய்க்கும் சிறுவனைப்போல் வேடங்கொண்டு அவ்விடத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயருக்குத் தோற்றமளித்தார்.

ஸ்ரீ அனுமார் அச்சிறுவனைக் கண்டு "அப்பா! சிறுவனே? இப்பொழுது அதிகமான தாகத்தோடு இருக்கின்றேன். இவ்விடத்தில் தண்ணீர் இருக்கும் இடத்தைக் காண்பிக்கவேண்டும்" எனவே, சிறுவன் வேடத்தில் இருக்கும் ஸ்ரீ பைரவ சுவாமி "அப்படியே காண்பிக்கிறேனென்று, இராமேசுவர வழியை விட்டு காளிங்க மடுவு கரைக்கு அழைத்துச்சென்று, கங்காபவானியை மனதில் தியானஞ் செய்தார்.

உடனே, மடுவு ஸ்ரீ ஆஞ்சநேயருக்குப் புலப்பட்டது.

ஜலத்தைக் கண்டதுமே பவன குமாரன், பிரம்மானந்தமடைந்து, அச்சிறுவனை நோக்கிச் "சிறுவனே! நீ காண்

Q23:3P.2112FK
N60

பித்த தீர்த்தத்தைக் கண்டதும், எனக்கு இராமேசுவரம் போய்ச்சேரும் பலம் வந்தது. ஆனால் தீர்த்தம் சாப்பிடும் ஆசையால் உன்னை ஒன்று கேட்கிறேன். யாதெனில், இதோ என் தலையின் மீதுள்ள பொருளைக் கீழேவைக்கக் கூடாது. ஆகையால் நான் தீர்த்தம் சாப்பிட்டு வரும் வரையில் இதை, உன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும்.''

எனவே அச்சிறுவன் அதற்கிணங்கி, ''ஐயா! தாங்கள் எண்ணத்தை அவசியம் நிறைவேற்றுகிறேன். ஆனால், நானோ சிறுவன். தாங்கள் கொணர்ந்து இருக்கும் பொருளைப் பார்க்க மலைபோல் காக்ஷியளித்து பயமுண்டாக்குகிறது. பாரமாய் இருக்குமென்றும் தோன்றுகிறது. என்றான்.

அதற்கு ஸ்ரீ ஆஞ்சநேயர், ''சிறுவனே, நீ நல்ல எண்ணத்தோடு இருப்பாயானால் பாரமாய் இருக்காது. கெட்ட எண்ணத்தோடு இருப்பாயானால், பாரமாகத்தான் இருக்கும்'' என்று கூற அச்சிறுவனும், அப்படியே என்று சம்மதித்து, அந்த லிங்கத்தைத் தன் கைகளில் பெற்றுக் கொண்டான்.

உடனே, ஸ்ரீ ஆஞ்சநேயர் பொங்கிவரும் சந்தோஷத்தினால் அம்மடுவில் இறங்கி தாகம் தீர தீர்த்தம் அருந்தி ஸ்நானஞ்செய்ய முயன்றார்.

இதற்குள் பைரவர் மடுவின் கரையில் லிங்கத்தை வைத்துவிட்டு, தன்னால் பாரம் தாங்க முடியாமல் கீழே வைத்து விட்டதாக, கூக்குரலிட்டு மறைந்து விட்டார்.

உடனே, காற்று வேகத்தில் பாய்ந்து கரை வந்து சேர்ந்தார் ஸ்ரீ ஆஞ்சநேயர். இதற்குள் பூமி குளிர்ந்து விட்டது. வழக்கம்போல் சூரியனும் பிரகாசத்தைக் குறைத்துக் கொண்டார். காற்றும் அடங்கிவிட்டது. அந்நகர வாசிகளும் வீட்டைவிட்டு மாடுகளை ஓட்டிக்கொண்டு வெளியில் வந்தனர்.



இச்சம்பவங்களெல்லாம் பார்த்த ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு கோபம் வந்துவிட்டது. லிங்கத்தை தன் வாலால் சுற்றி இழுத்தார். லிங்கம் அசையவில்லை. பின்பு, தன்னுடைய முழுபலத்தையும் கொண்டு இழுத்தார், ஆயினும் சிரமம் தான் மிச்சம்; லிங்கம் உத்திரபாகம் சாய்ந்துவிட்டது. ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு இன்னும் கோபம் அதிகமாயிற்று. கடைசியில் இப்படி சிந்தித்தார் :

''ஓஹோ! இவ்விடத்தில் ஸ்ரீ கால பயிரவ ஸ்வாமி எழுந்தருளி இருக்கிறார் அல்லவா? அவர்தான் என்னை வஞ்சித்து, இதுபோல் லிங்கத்தை நிலை நிறுத்திக் கொண்டார். ஐய்யகோ! இப்பொழுதோ காலம் மிக நீண்டுவிட்டது. அவ்விடம், ஸ்ரீ ராமர் அவர்கள் லிங்கத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பாரே! இராமேசுரத்தில் பிரதிஷ்டையாக வேண்டிய இந்த லிங்கம் லக்ன சமயத்தில் இவ்விடம் பிரதிஷ்டையானதே! இதற்கெல்லாம் காரணம்? அந்த மடுவு தான்!'' என்று முடிவு செய்து அதை அழித்துவிட உடனே புறப்பட்டு 'காரிகிரி' என்ற பர்வதத்தைக் கொணர்ந்து காளிங்க மடுவில் போட்டு, அந்த நீர்ப்பரப்பெல்லாம் ''காடாகக் கடவது'' எனச் சபித்தார்.

கடைசியில் ஸ்ரீ ஆஞ்சநேயர் மறுபடியும் காசிக்குச் சென்று மற்றொரு சிவலிங்கத்தை பெயர்த்துக் கொண்டு இராமேஸ்வரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

இராமேசுவரத்தில் ஸ்ரீ ராமரும், மற்றுமுள்ளோரும், உச்சிக்காலம் லக்னமாதலால், லிங்கத்திற்காக அது வரையில் எதிர்பார்த்து, சிந்தித்து, இது வேறு பாவம் சம்பவிக்குமென்று, மணலினாலொரு லிங்கத்தைச் செய்து லக்ன ப்ரகாரம் பிரதிஷ்டை செய்தனர்.

அந்திப்பொழுதிற்குள், ஸ்ரீ ஆஞ்சநேயர் லிங்கத்துடன் இராமேசுவரம் வந்து சேர்ந்தார். அந்த லிங்கத்-

த்தையும் மணல் லிங்கத்தின் பக்கத்தில் வைத்து பூஜை செய்தனர். ஆதலால் தான் இப்பொழுது ராமேசுவர க்ஷேத்திர மூலஸ்தானத்தில் இரண்டு லிங்கங்கள் உள்ளன.

**ராமகிரியின் விளக்கம் :-**

இராமேசுவரம் போகவேண்டிய லிங்கம் இவ்விடத்தில் பிரதிஷ்டையானதினால் 'ராமர்' என்ற பெயரும், லிங்கம் பிரதிஷ்டையான உடனே மடுவு மறைந்து மலை வீழ்ந்த தினால் 'கிரி' என்ற பெயரும் சேர்ந்து திருக்காரிகரை கிராமத்திற்கு 'ராமகிரி' என்ற பெயர் உண்டாயிற்று.

**வாலீஸ்வரர் பெயர் விளக்கம் :—**

இவ்விடம் பிரதிஷ்டையான சிவலிங்கத்தை ஸ்ரீ ஆஞ்சநேயர் தன் வாலால் சுற்றி இழுத்ததினால் மகேஸ்வரருக்கு வாலீஸ்வரர் என்ற பெயர் உண்டானது.

**காளிங்க மடுவின் நீர் விளக்கம் :-**

நீர் நிறைந்த காளிங்க மடுவில் மலை வீழ்ந்ததினால் தண்ணீர் நான்கு திசைகளிலும் பொங்கியது. அப்படிப் பொங்கிப் பாய்ந்த கால்வாய்கள் மூலமாய் அம்மடுவின் உற்பத்தி ஜலம் இன்றைக்கும் பாய்ந்துகொண்டிருக்கிறது.

தென் திசையில், அதாவது ராமகிரி தேவஸ்தானத்திற்கு, வலது புறத்தில் விருஷபத்தின் வாய் வழியாக நீர் திருக்குளத்தில் விழுகிறது. வடக்கு திசையில் ஸ்ரீ காளஹஸ்தியில் ஸ்வர்ணமுகி நதியில் கலக்கிறது. மேற்கு திசையில் 'ஆரை' என்கிற கிராமத்தின்மீது வயல்களுக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது. கிழக்கில் 'ஸத்திகட்டு' மடுவாக பெருகுகிறது.

இது போன்ற மகிமைகள் கொண்ட ஸ்ரீ வாலீஸ்வரர் ஆலயமானது சோழ ராஜாக்களால் கட்டப்பட்டு விளங்குகிறது.



ஸ்வாமிக்கு சிவராத்திரி மஹோற்சவங்கள் நடக்கப் போகின்றன. கைங்கரியம் செய்வதற்காகவும், இதர காலங்களில் க்ஷேத்திரத்தில் விவாஹ சுப முகூர்த்தங்கள் நடத்துவோருக்கு இடவசதி, பாத்திரவசதி செய்வதற்காகவும், பணிசெய்ய முயன்று சத்திரம் கட்ட 7-1-58 ல் கட்டட வேலை ஆரம்பித்து வேலை நடப்பதால் இதை கண்ணுறும் பக்தகோடிகள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து, டி திருப்பணியைப் பூர்த்தி செய்வித்து, இறைவன் திருவருளுக்கு பாத்திரர்களாகுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

83260

இப்படிக்கு :

உருருப்பேட்டை, **K. செஞ்சுராமய்யா.**

வெங்களத்தூர் போஸ்ட்,

திருவள்ளூர் தாலூக்கா,

செங்கற்பட்டு ஜில்லா.

ராமகிரி,
15—2—1960.

தமிழாக்கம் நூதலபாடி, சுப்ரமணியம், ராமகிரி.

"ஆனந்தபோதினி" பிரஸ்,
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு,
சென்னை—1.

K. செஞ்சுராமய்யா,

ஏருருப்பேட்டை,

வெங்களத்தூர் போஸ்ட்,

திருவள்ளூர் தாலுக்கா.